


மனிதர்களும் வசிக்கும் பகுதிதான் அது. ஆனாலும், அந்தப் பிராந்தியத்துக்கு வெளியிலிருந்து எந்தக் கிராம, நகரவாசிகளும் பெரும்பாலும் போகமாட்டார்கள். காட்டு விலங்குகள் மீதான பயம் மட்டுமல்ல. காட்டு மனிதர்கள் மீதான பயமும். கடித்தா சாப்பிட்டு விடுவார்கள் என்று கேட்டுவிடாதீர்கள். சாப்பிடுவார்களோ இல்லையோ, கடித்துக் குதறிக் காயப்போட்டு விடுவார்கள். அன்னியர்கள் உள்ளே வர அனுமதி இல்லை என்று போர்டு ஏதும் எழுதி வைக்காமல், அனுமதி மறுத்துக்கொண்டிருக்கும் புராதனமான ஒரு வம்சத்தின் வழித்தோன்றல்கள் அவர்கள்.

பஷ்டூன்களில் முன்னேறிய மக்களும் உண்டு. ஆனால், லஷ்கர் இ தொய்பா தோன்றிய பிராந்தியமான ஆப்கனிஸ்தானின் குனார் என்கிற அந்த ஒரு பகுதியில் மட்டும் கொஞ்சம் ஆபத்து சதவிகிதம் அதிகம். இருபதாம் நூற்றாண்டிலும் கற்காலத்தைக் காப்பாற்றி வந்த மக்களாக அவர்கள் இருந்தார்கள்.

கரடுமுரடான மலைகள். கால் தவறி நுழைந்துவிட்டால், மீள முடியாதபடிக்கு அடர்ந்த காடு. ஹிந்துகுஷ் மலைத் தொடர் பகுதிகளுக்கே உரிய உறுத்தும் குளிர் சீதோஷணம். எங்கும் எந்த மிருகமும் நடமாடலாம். மிருகங்களுக்குக் குறிவைக்கும் வேடர்களின் நடமாட்டமும் அதிகமாகவே இருக்கும். இன்னமும் உண்டு விஷ அம்புகள். இரவுகளில் கூடியிருந்து மரக்கட்டைகளை எரித்துக் குளிர் காய்ந்து ஆடிப்பாடும் ஆதிவாசிகள். மூச்சைப் பிடித்துக் கொள்ளுங்கள், அங்கேதான் இப்போது நாம் போகப்போகிறோம்.

ஆப்கனிஸ்தானின் அந்த வடகிழக்கு எல்லையோரப் பிராந்தியத்துக்கு பஷ்டூனிஸ்தான் என்று பெயர். பொதுவாக, அரசர்கள் காலத்திலிருந்து அரசியல்வாதிகள் காலம் வரை அந்தப் பகுதிக்கு யாரும் போய்ப் பார்த்ததில்லை. யாரோ சில மனிதர்கள் அங்கே வாழ்கிறார்கள் என்று தெரியும். ஆனால், எப்படி இருக்கிறார்கள் என்று போய்ப் பார்த்ததில்லை. நேஷனல் ஜாகரபிக் சானல்காரர்கள் மாதிரி யாராவது போய்வந்தால்தான் உண்டு.

அப்படியொரு பகுதியைத்தான் இருபதாம் நூற்றாண்டின் புரட்சியாளர்களும் தீவிரவாதிகளும் தங்களுக்கான அடைக்கல ஸ்தலமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். வெறுமனே சதித்திட்டம் தீட்டவும் போர்ப்பயிற்சிகளுக்கும் மட்டுமல்ல. தயங்காமல் எத்தனை இயக்கங்கள் அங்கே வந்து ஹெட் ஆபீஸ் திறந்தாலும் பஷ்டூன்கள் ஆதரிப்பார்கள். 'அரசுக்கு எதிராகப் போராடுகிறாயா? போராடு. புரட்சி செய்கிறாயா? செய். யுத்தம் புரிகிறாயா? பேஷாகச் செய். ஆயுதம் தயாரிக்கிறாயா? என்ன ஒத்தாசை வேண்டுமானாலும் தயங்காமல் கேள். புலிப்பால், எலிப்பால் கூடக் கிடைக்கும்.'

அவர்களுக்குப் படிப்பு கிடையாது. அரசியல் தெரியாது. புரட்சி புரியாது. தீவிரவாதம் என்றால், ஏதாவது பச்சிலை வேண்டுமா என்பார்கள்.

ஆனால், தங்களை நம்பி வந்து அடைக்கலம் கேட்டுத் தங்க விரும்பும் யாரானாலும் அனுமதிப்பார்கள். உயிரைக் கொடுத்து ஒத்துழைப்பார்கள். அதனால்தான் ஆப்கன் – சோவியத் யுத்த காலத்தின்போதும் சரி, அமெரிக்க – ஆப்கன் யுத்த காலத்திலும் சரி, ஆப்கன் போராளிகள் அத்தனை பேரின் அஃபீஷியல் அட்ரஸ் பஷ்டூனிஸ்தான் என்கிற குனார் பிராந்தியமாகவே இருந்தது. தொடக்க காலத்தில் பாகிஸ்தான் பார்டரைத் தமது தலைமையிடமாகக் கொண்டு ஒசாமா பின்லேடன் அல் காயிதாவை வளர்த்தபோதும், பின்னாளில் அமெரிக்க யுத்தத்தின் இறுதியில் அவர் தலைமறைவானதும் கூட இந்தப் பிரதேசத்தில்தான்.

இது அமெரிக்காவுக்குத் தெரியாதா? அதன் சாட்டிலைட்டுகளுக்குத் தெரியாதா? ஹமீத் கர்சாய் தலைமையிலான இன்றைய ஆப்கனிஸ்தான் அரசுக்குத் தெரியாதா என்றால், ஆத்தா சத்தியமாகத் தெரிந்துதான் இருக்க வேண்டும்.

ஆனாலும் நெருங்க முடியாத பிராந்தியம் அது. அப்படியொரு அடர்த்தி, அப்படியொரு இருட்டு, அப்படியொரு அபாயகரமான மலைக்காடு. அமெரிக்க வீரர்கள் குனாரை 'எதிரி ஏரியா' என்றுதான் அழைப்பார்கள். அவர்களது ரெக்கார்டுகளிலும் Enemy Central என்றே குறிப்பிட்டிருப்பார்கள். தாலிபன்களாகட்டும், அவர்களுடைய தாத்தாக்களான குல்புத்தீன் ஹெக்மதியாரின் ஹெஸ்பி இஸ்லாமியாகட்டும், இன்னபிற ஆப்கன் ஜிஹாதி குழுக்களாகட்டும். உட்கார்ந்து யோசித்துப் புரட்சி பண்ண உகந்த இடம் அதுதான்.

எஸ்டாப்ளிஷ்மெண்ட் ஷாட் இந்தளவுக்குப் போதும். உள்ளே நடக்கிற விஷயங்களை இனி பார்க்கலாம்.

பாகிஸ்தானில் உள்ள எத்தனையோ பல மத அடிப்படைவாத அமைப்புகளுள் ஒன்று மர்கஸ் உத் தாவா வால் இர்ஷாத் (MarkazudDawawalIrshad). மதப்பள்ளிக்கூடங்கள் நடத்துவது, மறைவாகத் தீவிரவாதத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பது, போராட்ட ஆர்வமுள்ள இளைஞர்களைத் திரட்டி ஆப்கனிஸ்தானுக்கு அனுப்புவது என்று வழக்கமான காரியங்கள் செய்துகொண்டிருக்கும் ஓர் இயக்கம் இது.

இந்த அமைப்பு, தனக்கென்று ஒரு ராணுவப் பிரிவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று விரும்பி, சில ஆப்கன் முஜாஹிதின்களை அணுகியது. இதன் தலைவரான புரொபசர் ஹபீஸ் முஹம்மது சயீது (எந்த காலேஜில் உத்தியோகம் பார்த்தார் என்று தெரியவில்லை.) இதன் பொருட்டு பலமுறை ஆப்கனிஸ்தானுக்குப் போய், பல்வேறு போராளி இயக்கங்களின் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

ஒரு சிறந்த போராளி இயக்கத்தைத் தோற்றுவித்து, பயிற்சியளித்து, தயார் செய்யுமளவுக்கு பாகிஸ்தானில் வசதி வாய்ப்புகள் கிடையாது. ஸ்திரத்தன்மையற்ற அரசியல். எப்போது தூக்கிக் கொஞ்சி விளையாடுவார்கள், எப்போது பிடித்துப் பிறாண்டி எடுப்பார்கள் என்றே கணிக்க முடியாத அரசியல்வாதிகள். (அப்போது பேனசிர், நவாஸ் ஷெரீஃப் மாற்றி மாற்றி ஆண்டுகொண்டிருந்த காலம்.) எனவே, உருப்படியாக ஒரு தனியார் ராணுவத்தை உருவாக்க, ஸ்திரத்தன்மை என்பதே இல்லாத ஆப்கனிஸ்தான் தான் சரி என்று, அவர் நினைத்திருக்க வேண்டும். தவிரவும் அனுபவமுள்ள போராளிகள் பலர் இருக்கிற பிராந்தியம். குனார் மாதிரி ஒரு குகைக்காடு. பிரச்னை ஏதும் கிடையாது.

ஆகவே, அவர் அடிக்கடி ஆப்கனுக்குப் பயணம் மேற்கொண்டார். பல்வேறு போராளித் தலைவர்களைச் சந்தித்துப் பேசி, சிலருடைய ஆதரவைப் பெற்று ஒருவழியாகத் தனக்கென்று ஒரு ஸ்கூலை அங்கே உருவாக்கியும் விட்டார்.

அல் காயிதா பயிற்சியளித்ததா என்று சரியாகத் தெரியவில்லை. ஆனால், ஆப்கன் முஜாஹிதின்களில் பல முக்கியஸ்தர்கள் குனாரில் தோன்றிய மர்கஸ் உத் தாவா வால் இர்ஷாத்தின் போர்ப் பயிற்சிப் பள்ளிக்கு வந்து பாடம் சொல்லிக் கொடுத்தார்கள். புரொபசர் முதல் கட்டமாக பாகிஸ்தானிலிருந்து பன்னிரண்டு இளைஞர்களை அந்தப் பள்ளிக்கூடத்தில் 'படிக்க' அழைத்து வந்திருந்தார். ஆர்வமும் துடிப்பும் தீவிரமும் மதப்பற்றும் மிக்க இளைஞர்கள். (1993-ல் முதன்முதலில் இந்திய எல்லைக்குள் ஊடுருவிய லஷ்கரின் 12 நபர்கள் இவர்கள்தான். இது பற்றி விரிவாகப் பிறகு பார்க்கலாம்.) அவர்களுக்கு அடிப்படை துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஆரம்பித்து, வெடிகுண்டு தயாரிப்பது வரை அனைத்தையும் அங்கே கற்றுக்கொடுத்தார்கள். உளவு பார்ப்பது, உளவு பார்க்கப்படுவதிலிருந்து தப்பிப்பது, வரைபடங்கள் தயாரிப்பது, வரைபடங்களை வைத்துக்கொண்டு வேலை செய்வது என்று, பார்த்துப் பார்த்து ஆய அயோக்கியத்தனங்கள் அனைத்தையும் கற்றுக்கொண்டபின் அந்த முதல் பேட்ச் பன்னிரண்டு பேரும் பாகிஸ்தானுக்கு வந்து, அடுத்த செட்டுக்கு அவர்களே பயிற்சி அளிக்க ஆரம்பித்தார்கள்.

லாகூரில் புரொபசருக்கு மிகப்பெரிய ஆதரவாளர் கூட்டம் இருந்தது. தனியே ஒரு குட்டி ராஜாங்கத்தையே அவர் நடத்திக் கொண்டிருந்தார். ஏகப்பட்ட அறக்கட்டளைகளின் பெயரில் வருஷம் முழுக்க நிறைய வருமானம். தவிரவும் எடுக்க ஓர் ஆள், பிடிக்க ஓர் ஆள் என்று எந்தப் பக்கம் போனாலும் கொண்டாட ஒரு கோஷ்டி உண்டு அவருக்கு.

எனவே, புதிதாகத் தொடங்கிய தன்னுடைய ராணுவத்தை அடைகாக்கவும், மேல் பயிற்சி அளிக்கவும், புதிய போராளிகளை உருவாக்கவும் அவருக்கு லாகூரே சௌகரியமாக இருந்தது.

ஆனாலும் ஒரு பிரச்னை வந்தது. அது புரொபசர் எதிர்பார்க்காத பிரச்னை.

1990-ல் அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.வுக்கு இருந்த அதிமுக்கியமான பணி, ஆசிய நாடுகளை அளவெடுப்பது. ஆப்கனிஸ்தானில் ஆரம்பித்து, பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் என்று கோபால் பல்பொடி விற்பனையாகிற அத்தனை தேசங்களிலும் சி.ஐ.ஏ.வின் ரகசியக் கண்கள் இருபத்து நான்கு மணிநேரமும் விழித்தே இருந்தன.

எங்கே என்னென்ன நடக்கிறது, யார் யார் சமர்த்து, யார் யார் அபாயகரமானவர்கள், எந்தெந்த அறக்கட்டளைகள் எது எதுக்கு நிதி வசூலிக்கின்றன, வசூலிக்கிற பணம் எங்கெங்கே போகிறது, யார் சாப்பிடுகிறார்கள், ஒரு தேசத்திலிருந்து செய்யப்படுகிற ஐ.எஸ்.டி. கால்கள் அதிகம் யாருக்குப் போகிறது, அவர் யார், என்ன செய்கிறார், எந்த நாட்டில் என்ன ஜோலி பார்க்கிறார்? ஒவ்வொரு தேசத்து உயர்மட்டத் தலைவர்கள், அடிப்பொடிகள், அமைச்சர்கள், அவர்களது அடிப்பொடிகள், எதிர்க்கட்சிக்காரர்கள், அவர்களது அடிப்பொடிகள் - இவர்களுக்கெல்லாம் அரசியலுக்கு அப்பால் யார் யாருடன் நெருங்கிய தொடர்பிருக்கிறது? எதற்காக அந்தத் தொடர்புகளைப் பராமரிக்கிறார்கள்? பெரிய பெரிய வர்த்தக முதலைகள் என்னென்ன செய்கின்றன, அவர்களோடு தொடர்பில் இருப்பவர்கள் யார் யார்?

மூச்சடைத்தால், நிறுத்தி ஒரு கணம் மூச்சு விட்டுக்கொள்ளுங்கள். ஓர் உளவு அமைப்பு இன்னதுதான் செய்யும் என்று சொல்வதற்கில்லை. சி.ஐ.ஏ. என்ன செய்யும் என்பது யாராலுமே யூகிக்க முடியாத விஷயம். எதற்காக அவர்கள் இத்தனை மெனக்கெட வேண்டும் என்று தோன்றலாம்.

விஷயம் இல்லாமல் இல்லை. அன்றைய தேதியில் ஆசியாக் கண்டத்தின் பல தேசங்களில் உருவான அறக்கட்டளைகள் பலவற்றுக்குத் தீவிரவாத இயக்கங்களுடன் மிக நெருக்கமான தொடர்பிருந்தது உண்மை. கிழக்காசிய நாடுகளில் இந்த அறக்கட்டளை பிசினஸ் படு வேகத்தில் நடந்துகொண்டிருந்தது. பாகிஸ்தான், இந்தியாவெல்லாம் அதோடு ஒப்பிட்டால் உறை போடக் காணாது.

ஆப்கன் யுத்தத்துக்குப் பிறகு, ஆசியாவின் மீது அமெரிக்காவுக்கு விழுந்த கண், அதிகபட்சம் எத்தனை கொத்தித் தின்னலாம் என்றே பார்த்துக்கொண்டிருந்த நிலைமையில், பல்வேறு அறக்கட்டளைகள் அதன் பார்வையில் பட்டு கபளீகரமாகத் தொடங்கின.

இந்த அறக்கட்டளைக்கு இந்த இயக்கத்துடன் தொடர்பிருக்கிறது என்று அசைக்க முடியாத ஓர் ஆதாரம் கிடைத்துவிட்டால் போதும். அடுத்த கணமே சம்பந்தப்பட்ட அரசுக்கு, அமெரிக்க அதிபர் ஆபீஸிலிருந்து ஒரு நோட்டீஸ் வந்துவிடும். அந்த அரசாங்கம் அமெரிக்க ஆதரவு அரசாங்கமாக இருந்துவிடுகிற பட்சத்தில், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அறக்கட்டளைகளும் அதன் அதிபதிகளும் ஊத்தி மூடப்படுவார்கள். இருந்த இடம் தெரியாது. முதல் நாள் மாலை பார்த்த பெயர்ப் பலகை, மறுநாள் காலை இருக்காது. சீமான் சுத்த பட்டணம் பொடி என்று வேறு போர்டு வைத்துவிடுவார்கள்.

அப்படிப்பட்ட ஒரு நெருக்கடி நமது புரொபசருக்கு 1990-ம் ஆண்டு மத்தியில் வந்தது.

அப்போது பாகிஸ்தானின் பிரதமராக இருந்தவர் நவாஸ் ஷெரீஃப். நவாஸுக்கு முழு நேரப் பணி என்பது பேனசிர் புட்டோவை எதிர்ப்பது. பகுதி நேரப் பணி, பிரதம மந்திரியாக உத்தியோகம் பார்ப்பது. அது முஷரஃப்புக்கு முந்தைய காலகட்டம். பாகிஸ்தான் மக்கள், ஜெனரல் ஜியா உல் ஹக்கின் இரும்பு ஆட்சியிலிருந்து விடுபட்டு, கொஞ்சநாள் ஜனநாயக ஏசி காற்றை சுவாசிக்கலாம் என்று தீர்மானித்து, அம்மணிக்கும் ஐயாவுக்கும் மாற்றி மாற்றி ஓட்டுப் போட்டுக் கொண்டிருந்தார்கள் அப்போது. இரண்டு பேரும் கிடைத்தவரை லாபம் என்று நிறைய ஊழலெல்லாம் புரிந்து சொத்துச் சேர்த்து சௌக்கியமாக வாழ்ந்து வந்தார்கள்.

இந்த நேரத்தில்தான், நவாஸ் ஷெரீஃபுக்கு அமெரிக்க அரசிடமிருந்து அந்த எச்சரிக்கை நோட்டீஸ் வந்தது.

'மர்கஸ் உத் தாவா வால் இர்ஷாத் என்கிற அமைப்பை நடத்திக்கொண்டிருக்கும் புரொபசர் ஹபீஸ் முஹம்மது சயீது அத்தனை சரியான ஆள் இல்லை என்று நாங்கள் கருதுகிறோம். இந்த அமைப்பின் ஆயுதப் பிரிவான லஷ்கர் இ தொய்பா குறித்துக் கேள்விப்படுகிற விஷயங்கள் எதுவும் ரசிக்கும்படி இல்லை. இவர்களுக்கு எங்கிருந்து பணம் கிடைக்கிறது? யார் யார் உதவுகிறார்கள்? பாகிஸ்தான் அரசே உதவி செய்கிறது என்று வருகிற செய்தி உண்மையா? இக்கடிதம் கண்ட ஏழு நாள்களுக்குள் தக்க பதிலனுப்ப வேண்டுகிறோம்.'

நவாஸ் ஷெரீஃப் பயந்துவிட்டார்.

அரசியல்வாதியாகவும், தொழிற்சங்கத் தலைவராகவும் பாகிஸ்தானில் கொட்டி முழக்கியவர்தான் என்றாலும், இம்மாதிரி ஏதாவது நெருக்கடி என்று வந்தால், எழுந்து ஓடி நாற்காலிக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளக் கூடியவர். அது அவரது இயல்பு. அதுவும் அமெரிக்காவிடமிருந்து எந்த விதமான தகவல் வந்தாலும் பயப்படுவார். என்னவோ ஏதோ என்று நினைத்தபடிதான் தபாலையே பிரிப்பார். அவரது ஆட்சிக்கால சரித்திரம் முழுவதும் இதற்கு ஏராளமான உதாரணங்கள் காணக் கிடைக்கின்றன.

ஆகவே, என்ன ஏது, யார் என்று கூட விசாரிக்காமல் புரொபசருடன் சம்பந்தப்பட்டவர்கள் யார் அகப்பட்டாலும் பிடித்து உள்ளே போடு' என்று ஆணையிட்டார். லஷ்கர் தன் முழு பலத்தை முதன்முதலில் வெளிக்காட்ட வாகாக அமைந்த தருணம் அது.